[1984 மார்ச் 12

புறம்போக்கு நிலங்களில் பயிரிடப்படும் பழ மரங்களுக்கு பட்டா வழங்கும் திட்டம்.

270—(* வினா எண். 17970)—திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புறம்போக்கு நிலங்களில் பயிரிடப்படும் அனைத்து பயன்தரும் பழ மரங்களுக்கும் 2-சி பட்டா வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்.

(ஆ) அரசு புறம்போக்கு நிலங்களில், ஆட்சேபணை இல்லாத இனங்களில் செய்யப்படும் ஆக்கிரமிப்புகளில் நடப்பட்ட பழ மரங்களில் பலனுக்கு வந்த மரங்களுக்கு அனுபவதாரரின் விண்ணப்பத்தின் பேரில், உரிய விசாரணைக்குப் பின்பு, சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்தின் ஒப்புதலின் பேரில் கொடுக்கப்படுகிறது.

(முற்பகல் 9-30)

திரு. மே. அ. இராசகுமார்: தலைவர் அவர்களே, இந்த 2 சி பட்டா மூலம் தமிழ்நாட்டில் வசூலிக்கப்படும் மொத்த தொகை எவ்வளவு? எந்தெந்த துறைகளுக்கு எவ்வளவு எவ்வளவு பணம் பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்த 2சி பட்டா மூலம் வசூல் செய்கிற பணம் பூராவும் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் அந்த மரங்கள் எந்தெந்த ஊராட்சிகளில் இருக்கின்றனவோ அந்தந்த ஊராட்சிகளுக்கு அவற்றைக் கொடுத்துவிடுகிறார்கள்.

திரு. மே. அ. இராசகுமார்: தலைவர் அவர்களே, இந்த 2சி பட்டா வழங்கப்படும் மரங்களுக்கு இந்த அரசு எவ்வளவு வரி விதித்து வருகிறது? இதற்கு முன்பு எவ்வளவு வரி வசூல் செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அது மரங்களுக்கு ஏற்றவாறு செய்யப்படுகிறது. உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமென்றால் புளிய மரத்திற்கு பசலிக்கு ரூ. 3 வசூல் செய்து கொண்டிருந்தோம்.

1984 மார்ச் 12]

இப்போது ரூ. 6 வசூல் செய்யப்படுகிறது. மா மரத்திற்கு முன்பு ரூ. 3 வசூல் செய்து கொண்டிருந்தோம், இப்போது ரூ. 6 பலா மரத்திற்கு முன்பு ரூ. 3 வசூல் செய்துகொண்டிருந்தோம், இப்போது ரூ. 6 வசூல் செய்யப்படுகிறது. தென்னைக்கு முன்பு ரூ. 4 வசூல் செய்து கொண்டிருந்தோம், இப்போது ரூ. 8 வசூல் செய்யப்படுகிறது. பனை மரத்திற்கு முன்பு 50 பைசா வசூல் செய்யப்பட்டு வந்தது, இப்போது ஒரு ரூபாய் வசூலிக்கப் படுகிறது. இது ஒவ்வொரு பசலிக்கும் வசூல் செய்யப்படுகிறது.

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, மரங்களுக்கு 2சி பட்டா அளிப்பதுபோல் திருப்பத்தூர், ஆலங்காயம் பகுதிகளில் இருக்கிற மலைப்பகுதிகளில் உள்ள மலைவாசி மக்கள் பல ஆண்டுக் காலமாக இத்தகைய பலன் தரும் மரங்களை நட்டு வளர்த்தும் அவர்களுக்கு பட்டா வழங்கப் படாமல் இருப்பதாகத் தெரிகிறது. அதைச் சுற்றியுள்ள இடங்களில் அவர்கள் பயிர் செய்தும் வருகிறார்கள். அவர்கள் தங்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் 2—சி பட்டா கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, பலன் தரும் மரங்கள் அரசாங்கப் புறம்போக்கில், நத்தம் புறம்போக்கில் இருந்தால் அவை ஆக்கிரமிப்பாக இருந்தாலும் அந்த ஆக்கிரமிப்பு யாருக்கும் பாதகமாக இல்லை என்றால் அப்படி பாதகம் இல்லாத ஆக்கிரமிப்புக்கு மட்டும் 2—சி பட்டா கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடம், ஆக்கிரமிப்பு பாதகம் உள்ளதா இல்லையா என்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இப்படி 2சி பட்டா கொடுப்பதன் மூலம் வருவாய்த் துறைக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்பது என் கருத்து. இதைச் சொல்வதற்குக் காரணம், அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது புளிய மரம், பலா மரம், மா போன்ற மரங்களுக்கு இந்த 2சி பட்டா வழங்குவதன் மூலம் ரூ. 6 தான் வரியாக வசூல் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது, இந்த மரங்களினால் கிடைக்கக்கூடிய வசூல் ஆண்டுக்கு ஒவ்வொன்றிலிருந்தும் கிட்டத்தட்ட ரூ. 300-க்கு மேல் கிடைக்கும். இந்த 2—சி பட்டா கொடுப்பது ஒரு வேளை நிலச் சொந்தக்காரர்களுக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய மரங்களாக இருந்தால் பரவாயில்லை. ஆனால் புறம்போக்கு நிலங்களில் புளிய மரம் போன்ற அதிக வருமானம் வரக்கூடிய மரங்களை, வனத்துறை பொது ஏலம் விடுவதைப்போல் பொது ஏலத்தில் விடுகிற முறையை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, சாலையோரங்களில், நதியோரங்களில் இருக்கிற மரங்களை பொது ஏலத்தில் விடுகிறார்கள். சம்பந்தப்பட்ட துறை ஏலத்தில் விட்டு பணத்தை வசூல் செய்கிறார்கள். நத்தம் புறம்போக்கு என்று வரும்போது வீடுகளுக்கு அருகாமையில் நத்தம் புறம்போக்கில் உள்ள மரங்களுக்கு, குடியிருப்புகளில் வைத்து வளர்ப்பதன் காரணமாக 2-சி பட்டா கொடுக்கப்படுகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் சில செல்வாக்குள்ள பெரிய மனிதர்கள் இந்தப் புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களையெல்லாம் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி தங்கள் பெயரில் 2-சி பட்டா பெற்றுக்கொண்டு, தவறான முறையில் அதை பயன்படுத்துகிறார்கள். உதாரணமாக பனை மரங்களை தங்கள் பெயரில்2-சி பட்டா பெற்று மரமேறும் தொழிலாளர்களை கொத்தடிமைகளைப் போல் நடத்துகிற முறை பல பகுதிகளில் இருந்து வருகிறது. இதையெல்லாம் பரிசீலனை செய்து எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்தப் பகுதிகளில் உள்ள மரங்களுக்கு 2-சி பட்டா வழங்காமல் அந்த மரங்களை பொது ஏலத்தில் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் அப்படி நடக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதற்கான தனி நடவடிக்கைகள் எடுப்பது பற்றியும், 2-சி பட்டா கொடுப்பதை ரத்து செய்வதைப் பற்றியும் அரசு மீண்டும் பரிசீலனை செய்யும்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள ஜவ்வாது மலை அடிவாரத்திலே நீண்ட நாட்களாக 2-சி பட்டா வேண்டுமென்று மலை வாசிகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் கூட தாலுக்கா அலுவலகத்திற்கு பலமுறை சென்று சொல்லியிருந்தேன். இதிலே சில தவறுகள் நடைபெறுகின்றன. அதைக் கவனித்து அவர்களுக்கு நியாயமான நடைமுறையில் 2-சி பட்டா வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர்கள் 2-சி பட்டாவை ரத்து செய்ய வேண்டுமென்றும், 2-சி பட்டா விரைவில் கொடுக்க வேண்டும் என்றும் இப்படி பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நன்றாக ஆராய்ந்து உரிய நேரத்தில் நியாயமான நடவடிக்கை எடுக்கப்படும்.